விலை: சதம் 75 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 13 முஹரம் 30 இதழ் 286
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-11-81

சைக்கிளில் வந்தவர்
பணத்தைப் பறித்துச் சென்றார்ராம்

[யாழ்ப்பாணம்]
வங்கியில் வைப்பு செய்வதற்காகக் கொண்டு போகப்பட்ட 18 ஆயிரம் ரூபாய்ப் பணத்தை சைக்கிளில் வந்த ஒருவர் துரத்திப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டாராம்.

யாழ்ப்பாணக் ஸ்ரான்லி வீதியில் நேற்று பகல் வேளையில் இத்துணிகரச்சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

[6-ம் பக்கம் பார்க்க]

இடைத்தேர்தல்
நாளை நடைபெறுகிறது

சென்னை, நவ. 27

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தமிழக சட்டமன்ற உறுப்பினர் வாக்மீகி காலமானதைத் தொடர்ந்து நடைபெறும் இந்த இடைத்தேர்தலில் மொத்தம் 13 வேட்பாளர்கள் போதுகின்றனர். பத்து சுயேச்சைவாளர்களுடன் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரும், ஜனதா, இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். தேர்தல்முடிவுகள் திங்கட்கிழமை இரவு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

"பாகிஸ்தான் பாரத எல்லையில் ஆயுதம் குவிக்கிறது

விமானத் தளங்களும் அமைக்கப்படுகின்றன!"

ராஜ்யசபையில் பிரதமர் இந்திரா தகவல்

புதுடில்லி, நவ. 27

'இந்திய எல்லையில் பாக்கிஸ்தான் ஆயுதங்களைக் குவித்து வருவதுடன் ஏல்லைப்புறத்தில் விமானத்தளங்களையும் அமைத்து வருகின்றது' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று இந்திய ராஜ்ய சபையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் எல்லைப்பகுதியில் இரு தடவை அத்துமீறல் இடம் பெற்றுள்ளது என்றும் ஜம்மு-காஷ்மீர் எல்லைப்பகுதியில் 55 தடவைகள் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. என்றும் திருமதி காந்தி கூறினார். அண்மை இரகசிய தூதுவேஜூகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

"பாகிஸ்தானின் நோக்கம் இந்தியாவுக்குப் புரியும்"

புதுடில்லி நவ. 27

"இந்தியாவுடன் போர் விலக்கம் ஒப்பந்தம் செய்யக் கோரும் பாகிஸ்தானின் உண்மை நோக்கம் இந்திய அரசுக்குத் தெரியும்.

இவ்வாறு இந்திய பிரதி வெளிநாட்டு அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

பாகிஸ்தான் தமது நாட்டில் நவீன ஆயுதங்களைக் குவித்து வரும் அதே வேளையில் இந்தியாவுடன் போர் விலக்கம் ஒப்பந்தம் செய்ய விரும்பி கோரிக்கை விடுத்துள்ளது குறித்து இந்தியா விழிப்பாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இதேவேளையில் பாகிஸ்தானுடன் போர் விலக்கம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளதாக மற்றொரு செய்தி கூறுகிறது. (இ)

பிரிட்டிஷ் இடைத்தேர்தல்
சமூக ஜனநாயகக்கட்சி வெற்றி

லண்டன் நவ. 27

பிரிட்டனில் புதிதாக அமைக்கப்பட்ட சமூக ஜனநாயகக் கட்சி அங்கு நடைபெற்ற இடைத்தேர்தலொன்றில் வெற்றியீட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி ஷேர்லி வில்லியம்ஸ் என்பவரே இவ் இடைத்தேர்தலில் வெற்றியீட்டியுள்ளார்.

இத்தேர்தலில் இரண்டாம் போட்டியிட்ட தொழிற்கட்சி, தன்சர்வேட்டில் கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

இத்தேர்தலில் பேரவிடி இடம் தொழிற்கட்சி வேட்பாளர் கட்டுப்பணத்தை இழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமூக ஜனநாயகக்கட்சி பிரிட்டனில் அடுத்த பொதுத்தேர்தலில் லிபரல் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுமென தெரிவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் சமூக ஜனநாயகக்கட்சி பிரிட்டனில் புதிதாக அமைக்கப்பட்டது.

[வெ]

அமைச்சர் விஜயம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அமைச்சர் திரு. ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கிளிநொச்சிவிஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காலநிலை சீர்கேடு காரணமாகவே அமைச்சரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மேயர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூலகத்தை மீள்விநியோகத்து புனரமைப்பதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த திரைப்பட நாவிகைகள் தங்களது ஒரு நாள் சேர்வுகளை 'யாழ். பொதுசன நூலக நலன்' நிதிக்கு அன்பளிப்புச் செய்யுமாறு யாழ் மாநகர சபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தியேட்டர் நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

தமிழ்நாட்டில்
மூளைக்காய்ச்சல் நோய்: 120 பேர் பலி!

சென்னை நவ: 27

தமிழ் நாட்டில் அண்மைக் காலமாக மூளைக்காய்ச்சல் நோயினால் 120 பேர் பலியானார் என்றும் இவர்களில் அநேகர் 10 வயதுக்குட்பட்டவர்களே என்றும் மாநில சுகாதார அமைச்சர் டாக்டர் ஹாண்டே தெரிவித்தார்.

தமிழ்நாடு, ஆந்திரா பாண்டிச்சேரி, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும் இந் நோய் வேகமாகப் பரவிவருகிறது என்றும் அவர் கூறினார். (இ)

உணவுப் போஷாக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"இன்றைய பொருளாதார முறையை பழைய நிலைக்கு மாற்றினால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவழி பிறக்கும்" என்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தெரிவித்துள்ளார்.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் உணவு போஷாக்குப் பிரிவு யாழ். மாவட்டக்குழு நடாத்திய உணவுப் போஷாக்குப்பற்றிய கருத்தரங்கு யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் திரு. நடராசா மேலும் பேசுகையில் அரசாங்கத்தால் வழங்கப்படும் மாக்யங்கள் இன்றோ நாளையோ நிறுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை என்றும் கூறினார்.

யாழ்பல்கலைக்கழகப் பேராசிரியர் பாலகிருஷ்ணன், உணவுத்திணைக்களமிடல் போஷாக்குப் பகுதி பதில் அதிபர் திரு. கிருபந்திலகன் உட்பட பலர் உரையாற்றினர்.

யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதி அதிகாரி திரு. சுவாமிநாதன் இக்கருத்தரங்குக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

பிரயாணிகள் இன்றுதிரும்புவர்

பம்பாய், நவ 22

கடத்தப்பட்ட ஏயர் இந்திய போயிங் விமானத்தில் பிரயாணம் செய்த சில பிரயாணிகளும் நாளை சனிக்கிழமை பம்பாய்க்கு வந்துசேருவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட விமானத்தில் மொத்தம் 65 பிரயாணிகளும் 14 விமானச்சிப்பந்திகளும் இருந்தனர்.

துணிக்கை

பொதுசன நூலக காப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையின் துணிக்கை அமுலில் உள்ளது.

சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் 30-11-81 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2ம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1. நனைந்த பீடி இலைகள் [சுமார் 3 முடை]

எஸ். எம். ஜே. சேனரத்ன,
சுங்க சேகரிப்பாளருக்காக,
யாழ் மாவட்டம்.
சுங்க இலாகா,
யாழ்ப்பாணம்,
27-11-81. 1578

6 தேங்காய் திருட்டுக்கு 3மாத சிறை!

"தேங்காயில் தொடங்கி நாலியில் முடியக் கூடாது"

நீதிபதி எச்சரிக்கை

[சாவகச்சேரி]

6 தேங்காய் திருடியதாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒன்றரை வருடம் ஒத்திவைக்கப்பட்ட 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி ஆரம்பநீதிமன்றத்தில் நீதிபதி திரு. எஸ். யோசுதாசன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் மட்டுமில்லாமல் சேர்ந்த தம்பிராசா செல்வரத்தினம் (வயது 17) என்பவர் அவ்வூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆறுமுகம் என்பவருடைய வீட்டில் 7ரூபா 50 சதம் பெறுமதியான 6தேங்காய்களைக் களவாடினார் என்னும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி தமது தீர்ப்பில் கூறியதாவது: "நீர் வயது குறைந்தவரோ இல்லையோ என்பதை இனிமேல் ஈடுபடக்கூடாது முதன்முறையாக யாரால் இத்தண்டனை உமக்

(5ம் பக்கம் பார்க்க)

லேத் வேலையாள்

உடன் தேவை

நீர் இறைக்கும் பம்புகள் கலந்த மண்ணெண்ணெய்/மிகாரம் முதலியவற்றில் வேலைசெய்யும் இயந்திரங்களுக்கு பூட்டுவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து எழுத்துமூலம் உடனே விண்ணப்பிக்கவும்.

484, ஆஸ்பத்திரி வீதி ... யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1982

மீட்டல் வகுப்புக்கள்

வகுப்புக்கள் வரும் மாதம் புதுத்தவணை ஆரம்பத்தில் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முழுமை மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் டிசம்பர் மாத முதற் கிழமையில் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

அதிபர்

தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுன்டுக்குளி, யாழ்ப்பாணம் 1503

விசேட விலைக் குறைப்பு

யமஹா மோட்டார் சைக்கிள்கள்

யமஹா	V 50	8,750-00
யமஹா	YB 80	9,900-00
யமஹா	YB 100	10,500-00
யமஹா	RS 100	13,500-00
யமஹா	RX 100	14,950-00
யமஹா	RD 125	15,000-00
யமஹா	RD 200	19,000-00

சிறந்த பெறுமதிவாய்ந்தது யமஹா; மற்றைய விலைகளுடன் எமது விலைகளை ஒப்பிட்டுப்பாருங்கள்

* உதிரிப்பாகங்கள் எங்கும் கிடைக்கும்
* முதல் 50 கொள்வனவுகாரருக்கும் ஒவ்வொரு பாதுகாப்புத் தலைக்கவசம் இலவசம்
* மூன்று இலவச பராமரிப்புச் சேவையும் இலவச இயந்திரத் திருத்தச் சேவையும்

கொன்சோலிடேற்றட் இன்ஜினியரிங் கொம்பனி லிமிட்டெட்,
101, கியூ றோட், கொழும்பு-2
டெலிபோன்: 35009, 35464
(1507)

இன்றைய பலன்

சார்த்திகை மாதம் 13 ம் திகதி சனிக்கிழமை
(28 - 11 - 81)

மேடம்- எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும். உத்தியோகத்தர்களாகிய நிரீவாகத்தி றமையில் முதலிடம் பெறுவார்கள். மக்கள் செல்வாக்கு மனதைக் குளிரவைக்கும். அதிர்ஷ்ட தினம்.

இடபம்- பக்தியில் ஈடுபடுதேடுவதற்கும் பலவகைகள் வாய்க்கும். முக்கிய பேச்சுவார்த்தை விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். ஆயுதபீடத்து இடம் உண்டு. அவதானம்வேண்டும்.

மிதுனம்- இன்று மனதில் அமைதிப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இல்லக் கடமைகளை சமமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். எளிதிர வழியாலும் மகிழ்ச்சி ஏற்படும். இன்று பொன்னான தினம்.

கடகம்- கிரித்துப் பேசுபவர்கள் இன்று சீறிவிழுவார்கள். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அனுபவிக்க நேரிடும். கிலருக்குப் பதவி ஏற்றமும் தடைப்படலாம்.

சிங்கம்- கண்ணுக்கு வேறாறப்படுவார்கள் வெளியூர்களிலிருந்து அமைப்புக் கிடைக்கலாம். பிதாவழித் தனவரவுக்கு இடமுண்டு. தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்.

கன்னி- தொழில் புரியும் இடத்தில் மேலிடத்து ஆதரவு கிடைக்கும். புதுத்துறைகளில் நாட்டம் பிறக்கும் கிலருக்கு பதவி உயர்வுக் கிடைப்பதற்கு இடம் உண்டு.

துலாம்- வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொந்த விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கப்படும். பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும்.

விருச்சிகம்- பணம் பறிப்பதாக ஒரு கோஷ்டியினர் புகழ்பாடிக்கொண்டிருப்பர். எவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம். கடல் பிரயாணத்தைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

தனு- தேனும் இனித்து இன்று மேம்பாடு காக்கும். மனப்போராட்டத்துக்கும் இடம் உண்டு. அதிக கிழவனுக்கு இடம் அளிக்காது அமைதியுடன் இருக்கவும். இறை நம்பிக்கை நன்று.

மகரம்- முதலான சந்திப்பு ஒன்று கைகூடும். முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். சந்தர்ப்பம் பயனுள்ளது. களத்திரவழியாலும் மகிழ்ச்சி ஏற்படும். இன்று பொன்னான தினம்.

கும்பம்- உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதர வழியாவ் சஞ்சலத்துக்கு இடம் உண்டு. எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும். ஓய்வு விரும்பத்தக்கது.

மீனம்- திடீர் திருப்பங்கள் ஏற்படும். ஆரம்பத்தில் கடின மாகத் தோன்றியவை இலகுவில் முடியலாகும். இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். திருப்திகரமான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

விற்பனைக்கு

சுன்னாகம் ரயில்வே கிறேசனுக்கு கிழக்குப் பக்கமாக நாலு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். N. V. செல்லத்துரை, ஊரெழு மேற்கு, சுன்னாகம். 1533

நாஷனல் பனசோனிக் SG 2100 மொடல் நிறி இன்னும் விற்பனைக்குண்டு. தொடர்பு ஜே. பகீரதன், "சஸ்டர பதி", 1ம் கண்டம், உடுவில். 1570

கொழும்புத்துறை றோட்டுக்கு 300 யார் தூரத்தில் புகையிரதம் வீதியில் 4 பரப்பு வீடுகட்டும் நிலம் விற்பனைக்கு உண்டு. 2 பரப்புகளாகவும் விற்கப்படும். தொடர்பு கொள்க. ச. இராசா, சித்திரலேகா விருடியோ, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். 1547

நவீன தளபாடங்களுடன் கூடிய விசாலமான விநாயகர் விநாயகம் (கண்டிடம் தவிர்த்து) பண்டத்தரிப்பு சந்திக்கருகாமையில் விற்பனைக்குள்ளது. கூப்பாடுடன் பாக்கி லுக்ஸ் போடுவதற்கு உகந்தது. கடிதமூலம் தொடர்புகொள்க: கோகிலா வாசம், "சித்தியரர் களவு" சந்தரோடை சுன்னாகம். 1551

புதிய நாசனல் பனசோனிக் கலரோ றேடியோ கசற் றெக்கோடர் RX 5600F/FA விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. செகுப்பிரமணியம், கரந்தன், நீர்வேலி. 1552

பின்னுறுதிக்கட்டளை பற்றிய

அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுன்னாகம் மேற்கு இலவனாகை கொலைக் பெண் காளஞ்செல்ற புனிதமரியின் மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர் இலவனாகை கொலைக் சுன்னாகம் மேற்கு, மனுதாரர்

தத்துவ நிவாரணக்கோரிக்கை வழ. இல. V / 98

எதிர்

1. கொலைக் மகன் சிவராணி
2. கொலைக் மகன் வசந்தராணி
3. சிவலிங்கம் கொலைக் பராயமற்றவர்
4. கொலைக் மகன் ரூபராணி, பராயமற்றவர்
5. விசுவலிங்கம் கந்தசாமி. காப்பாளர், சுன்னாகம் மேற்கு, மனுதாரிப்பு.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கத்தில் கொண்ட மரணசாதனமில்லா மரணச்சொத்து வழக்கு மேற்காணிய இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அத்தாட்சி பின் முறிகளும் கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 18-ம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி அவ்வாறு பதிவுப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக நிராகரிக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

1981 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ம் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி
கு. வ. கணேசன்
பதிவாளர்.

தயாரித்தவர்-
பூ. சதாசிவரத்தினம்
மனுதாரரின் சட்டத்தரணி
1574

வரி விளம்பரம்

விற்பனைக்கு

தொண்டமானாறு தெல்லிப்பழை வீதியில் 'கீதாஞ்சலி' சேமாடு' 1 ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. த. எனோதிரன், வி. மு. தொகு, பருத்தித்துறை 1520

தேவை

ஆங்கிலத் தட்டெழுத்தும், ஆங்கில அறிவும் தெரிந்த ஒருவர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தகைமை விபரங்களுடன் விண்ணப்பிக்க: வீரம்பர இல. 1560, மே/பா ஈழநாடு, த. பெ. எண். 49, யாழ்ப்பாணம். 1560

FOR SALE

Toyota Corona RT84 1700 CC 1971/72 model with Air-Con, Radio / Cassette, BTC Immaculate Condition Seen 61, Kachcheri-Nallur Road, Jaffna 1571

வாடகைக்கு

ரிப்பர் லோறிகள் வாடகைக்குவிடப்படும். நாயகி பிறின்டேர்ஸ், ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். 1546

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காளஞ்செல்ற சுன்னாகம் இலவனாகை கொலைக் பெண் பராதீனப்பட்டவரின் மரணசாதன மரணச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்
வேலுப்பிள்ளை ஞானரத்தினம்,
புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம் - மனுதாரர்

வழக்கு இல: 86
மரணசாதனத் தத்துவம்

எதிராக

1. அப்புக்குட்டி மகன் செல்லத்துரை,
   ஏழாலை மேற்கு, ஏழாலை.
2. பிள்ளையினார் கைம்பெண் தங்கம்,
   பாவலர் துரையப்பா வீதி தெல்லிப்பழை
3. செல்லர் இரத்தினம்,
   பாவலர் துரையப்பா வீதி தெல்லிப்பழை
4. கோபால கிருஷ்ணன் கைம்பெண் சூரிமுத்து அந்தோனியார் வீதி, சுன்னாகம்,
5. கதிரன் பெண் இராசலக்ஷ்மி சரசாலை, சாவகச்சேரி
6. செல்லையா பெண் ஞானமணி.
   கரம்பகம்,
   எழுதாட்டுவான்.

— எதிரிமனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கத்தில் கொண்ட மரணசாதனவழக்கு மேலேயுள்ளதிலிடப்பட்ட இறந்தவேனவரின் மரணசாதனத்தை ஏன்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அத்தாட்சி பின்னுறுதிக்கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 18-ம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி அவ்வாறு பதிவுப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக நிராகரிக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

1981 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ம் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி
கு. வ. கணேசன்
பதிவாளர்.

தயாரித்தவர்-
பூ. சதாசிவரத்தினம்
மனுதாரரின் சட்டத்தரணி
1574

மேலேயுள்ள இலக்கத்தில் கொண்ட மரணசாதனமில்லா மரணச்சொத்து வழக்கு மேற்காணிய இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அத்தாட்சி பின் முற்றாக்கும் கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ம் திகதி காலை 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி காரணமிருப்பின் பதிவுப்பட்ட பின் முற்றாக்கும் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டலாமென இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9-ம் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி
கு. வ. கணேசன்
பதிவாளர்
159

மணிவாக்கு

மாபெரும் மனிதர்கள் அனைவரும் அறிஞர்களாக இருந்து விடுவதில்லை.

— பைபிள்

நமது நோக்கு

சுரண்டப்படும் சமுதாயம்

மலையக மக்களை இன்றும் ஒரு பிரத்தியேகமான கூட்டத்தினராகக் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது. ஆதியில் இவர்களை வாய்விடாச் சாதி என்று கருதி, தோட்டங்களுக்கு எழுதப்பட்ட மானிடமிருகங்க ளென்று கொள்ளப்பட்டது. இருப்பினும் அவர்களை இங்கு வரவழைத்த வெள்ளையர்கள் மனித உரிமைகளில் சிலவற்றை நாகரிக முறையில் வழங்கி வந்தனர்.

சுதந்திர இலங்கையில் கிடைத்த பாக்கியம் நாடற்றவரென்ற பட்டம். இன்றும் இந்த நீண்டகாலப் பிரச்சினை சீரடையும் நிலை திருப்திகரமாக விருக்கவில்லை. ஆயினும் மாறி வரும் சமூகங்கள் வாக்குரிமை பெற்ற மலையக மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவர்களின் தொழிற்சங்கங்களை தம்வசப்படுத்தி வந்தனர். இரண்டு மாபெரும் தொழிற்சங்கங்கள் ஒன்றுக்கு ஒன்று போட்டியாக ஐ. தே. கட்சிக்கும், ஸ்ரீ ல.சு.க. கட்சிக்கும், மாறிமாறி ஆதரவளித்து வருகின்றன. தலைவர்கள் உயர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

தொழிற்சங்கங்கள் அரசியல் ஆதரவை நாடியதால் தொழிலாளர்களுக்குச் சிறந்த சேவை ஆற்ற முடியவில்லை. கல்வியறிவு, நாட்டு வளப்பம், இல்லாத நிலை நெடுங்காலம் தொடர்ந்தமையால், இத்துரதிஷ்டவசமான ஏழை மக்களை தலைவர்கள் தாங்கள் நினைத்த படியெல்லாம் ஆட்டிவைத்தனர்.

தொழிலாளிகளின் குரலைப் பிரதிபலிக்கும் தொழிற்சங்கம் வேறு தொழிலாளிகளின் அறியாமையைச் சுரண்டி அவர்களின் குறைகளைத் தங்கள் நிறைவுக்குப் பயன்படுத்தும் தொழிற்சங்கம் வேறு.

இன்று, எண்ணம்போல் குழந்தைகளாக, கிணறுதாண்டவுள்ளோர்களாகவிருக்கும் தொழிலாளிகள் மிகக் குறைவு. கல்வி, கேள்வி பொதுஅறிவு, பத்திரிகை வாசித்தல், சமூகமன்றங்கள் முதலிய சாதனங்கள் இவர்களிற் பலரை நல்ல பிரஜைகளாக, பண்புள்ள மனிதர்களாக வளர்த்து வருகின்றன

இவ்வாறு விருத்தியடையும் நிலையில் இவர்களின் பொருளாதார நிலை மாண்டு வாக்போல் வளர்கின்றது

கடந்த இரண்டு பட்ஜெட்டுகளில் வழங்கப்பட்ட சம்பள உயர்வு இவர்களுக்கும் உரியதா என்பது சந்தேகம் அளிக்கின்றது. சென்றவருட 70 ரூபாய் உயர்வு இன்னும் வழங்கப்படாத நிலையில், இந்தவருடம் கிடைக்கவிருக்கும் 107ரூபா எவ்வாறுகிடைக்கும்?

ஜனாதிபதி தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கண்டிப்பாக வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டாராகச் செய்தி; ஆனால் தெய்வக் விடைகொடுத்தாலும் பூசாரி என்ன செய்வாரென்பதே கேள்வி. மொத்தமாகக் கிடைக்கவேண்டிய 177 ரூபாயையும், நாட்சம்பள வேலையாகையால், வேலை நாட்களைக் குறைத்துவிட்டால் கைகொட்டினது வாய்கொட்டாமற் போய் விடும்.

ஐ. நா. விடைகாணுமா?

அடுத்த ஐ. நா செயலாளர் நாயகம் யார் என்பது உலகத் தலைவர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

நல்லவராக நடு நிலைமை நாடும் வல்லவராக ஒருவர் கிடைக்குமானால் உலக சரித்திரம் மிதமான பாதையை நடைவழிபிறக்கும்.

பாதுகாப்புச் சபையிலுள்ள நிரந்தர அங்கத்தவர்களான 'பெரிய நாடுகள்' இந்த நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் இராப்பகலாக ராஜதந்திர சூழ்ச்சிகளை பயன்படுத்துவது பகிரங்க இரகசியம்.

திரைக்குப்பின் நிகழும் கபடநாடகங்களில் வஞ்சகர்க்கும் சுயநலத்துக்கும் போதிய இடம் உண்டு. இருப்பினும் ஒரு பழகிய 'டெவில்' பழகாத புதிய 'டெவிலிலும்' பார்க்க நல்லது என்ற வாசகத்திற்கு இணைய, அவரைத் தொடர்ந்து எதிர்க்கும் சீனா வச்சரிப்பிடித்தாகி, விடயம் வெற்றியாகுமென்று கருதப்படுகிறது.

இன்றைய செயலாளர் திரு வால்தெயிமிக்கீனுக்கு எவ்வித வெறுப்புமில்லையாம், மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதியை ஆதரிக்கவேண்டுமென்ற கருத்தைக் கடைப்பிடிக்கவே சீனா முயல்கிறது.

எதுஎன்னவானாலும் இவ்வித தேர்தலில் பல 'குத்து வெட்டுகள்' மிக அமைதியாக நடந்து முடிகின்றன. ஒரு உதாரணம் வாசகர்களுக்கு சுவையளிக்கும். அமரர் டாக்டர் மார்ஷல் ஐ. நா. பொதுக் காரியதரிசிகளின் திலக மெனலாம். அவருடைய அகால மரணத்துக்குமுன் அடுத்த சந்தர்ப்பம் இந்தியாவுக்கே என்று கிபார்சு செய்தார். இதனை பலர் ஆதரித்தனர். அச்சமயம் ஊதாரியாரென்றும் தெரியாத காலம். பிரதமர் நேருவிற்கு இந்தச் சிபார்சு அறிவிக்கப்பட்டது. இந்திய ஐ. நா. பிரதிநிதிகளின் தலைவர் திரு கிருஷ்ணமேனன் தம் முடைய கட்டத்தினரிக் தலைதிமிர்ந்த தேர்மையான திறமைசாலி பி. கே. நேருவென்பது அவருக்குத் தெரியும். அந்த வணிகராமுடியனை அந்தப் பதவியில் வைப்பது மேனனுக்கு விருப்பமில்லை. பிரதமர் நேரு பி. கே. நேருவையே பிரேரித்திருந்தார். திரு கிருஷ்ண மேனனுக்கு ஆதரவில்லை.

திரு. பி.கே. நேரு திறமையும் நேர்மையும் ஆளுக்கு பணிவும் உடையவர் தேர்தல் சூடுபிடிக்க மேனன் பி. கே. நேருவை இந்தத் 'தலையிடி' வேலையிலிருந்து விலகச் செய்து விட்டார். இந்தியா ஒரு அரிய தருணத்தை இழந்தது. ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒருபெரிய சீமாட்டியின் தனிப்பிள்ளையை விவாகஞ் செய்த பிரமுகர் ஒருவர் மாமியாரைக் கண்ணிற் காணப்படாதநிலை. வெளியூரில் மகளும் மருமகனும் வாழ்ந்த காலத்தில், மாமியார் இறந்து விட்டாரென்ற தந்தியில், அவரை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்று கேட்கப்பட்டிருந்தது. உடனே மருமகன் 'இரண்டையும் செய்யுங்கள் பிழைக்க இடம் வைக்காது நிறைவேற்றி வையுங்கள்'' என்று பதிலளித்தாராம்.

சர்வதேச ராஜதந்திரத்தின் எல்லை நெளிக்கு இருந்தவாறெனவே!

பொன்விழாவும் கரக்காய்ப்பொன்னும்

சர்வஜன வாக்குரிமை பொன்விழாவும் கொண்டாடியாச்சு, மகாராணியும் வந்து போயாச்சு இனி என்ன? திருமந்திரம் தான் நினைவிற்கு வருகின்றது.

"பந்தல் பிரிந்தது பண்டாரங் கண்டற்றது ஒன்பது வாசலுக் ஒக்க அடைந்தன''

இலங்கை மனித உரிமை இயக்கம் "சர்வஜன வாக்குரிமை - இதைவிடசாதிக்க முடியாதா? "என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கும் சிறு பிரகரம் இது காக்காய்ப் பொன் விழா எப்பதை தெளிவுபடுத்துகின்றது.

1971-ல் அமைக்கப்பட்ட இலங்கை மனித உரிமை இயக்கம் ஒரு கயேச்சையான ஓரசியாயாத ஸ்தாபனமாகும். கடந்த வாரம் தனது பத்தாண்டைக் கொண்டாடுகிறது.

ஏறக்குறைய 15 பக்கங்களில் பொன் விழா எடுக்கப்பட்ட சர்வஜன வாக்குரிமையின் 'பொட்டுக்கேடுகள்' ஆம் பலப்படுத்தப்படுகின்றன.

இச்சிறுபிரகரம் முதலாவதாக வாக்குரிமையற்ற தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையைப் பிட்டுக் காட்டுகின்றது. இது தொடர்பாக ஒரு முக்கிய விஷயத்தையும் பிரகரம் குறிப்பிடுகின்றது. பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ள நபர்கள் பற்றி பொலிசார் விசாரணை செய்யுமிடி யணிப்பிக்கப்படும் போது விண்ணப்பகாரரின் அரசியல் கட்சி விசுவாசம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது கேள்விகளில் ஒன்று என்று மனித உரிமை இயக்கத்துக்கு 1979-ல் ஆண்டில் அறியக் கிடைத்தது'

இந்தப் படுமொடூரமான நடைமுறையைக் கண்டித்து இயக்கம் அரசாங்கத்துக்கு கடிதம் எழுதியது. பலன் கிடைத்ததா? இயக்கத்தினரே பதில் தருகின்றனர். பலமுறைகள் ஞாபகப்படுத்தியபோதிலும் இக் கேள்விகளுக்கு உருப்படியான பதில் எதும் கிடைக்கவில்லை இது கைவிடப்பட்டது என்றும் உத்தரவாதம் கிடைக்கவில்லை'' இந்த லக்ஷணத்தில் தான் சர்வஜன வாக்குரிமைக்கு இலங்கையிலும் இங்கிலாந்திலும் பொன் விழா எடுத்தார்கள்.

வேறு குறைபாடுகளையும் இப் பிரசுரம் கண்டிக்காமல் தவறவில்லை. அத்தியாய தலைப்புக்களிலிருந்து இச்சிறு பிரசுரத்தின் 'வீச்சு' தெரிகிறது. அரசியல் தலைவர்களின் ருடியியல் தகுதியீனம், வாக்குரிமையும் 1978 அரசியல் சட்டமும், புதிய வாக்குமுறையும் சிறிய கட்சிகளின் பெறுமதி குறைப்

6 ம் பக்கம் பார்க்க

தொண்டைமானாறு

வெளிக்கள நிலையமும் அதன் கல்விப்பணியும்

(நேற்றைய தொடர்ச்சி)

பாடசாலைக் கல்வி சிறப்பாக நடைபெற விரிவான பாடத்திட்டம் இன்றியமையாததாகும். ஆசிரியர்கள் அதிபர்களுடைய வேண்டுகோளுக்கு அமைவாக நிலையம் 6-ம் தரம் முதல் 10-ம் தரம் வரையிலான விஞ்ஞான, கணித, சமூகவியல் பாடத்திட்டங்களை விரிவுபடுத்தி, கல்வித்திணைக்கள உதவியோடு வெளியிடுகின்றது. க. பொ. த. (உ. த) வகுப்புகளுக்கான விரிவான விஞ்ஞான, கணித பாடத் திட்டங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

கலைப்பாடங்களுக்குரிய விரிவான பாடத்திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பையும் நிலையமே மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை பற்றியும் நிலையம் ஆராய்ந்து வருகிறது.

தேர்வுகள்

புதிய பகுதேர்வு விஞ, அமைப்புக் கட்டுரை விஞ முதலியவற்றை உள்ளடக்கிய விஞ்ஞாதாள்களைத் தயாரித்து மரணவர்களின் தரத்தைமதிப்பிடுவது பாடசாலைகளுக்கு பெருஞ்கலையாக உள்ளது. இதற்கான உதவியையும் பாடசாலைகள் வெளிக்கள நிலையத்திடம் கோரின. இதனால் வெளிக்கள நிலையம் 6, 7, 8, 9, 10-ம் தரங்களுக்கான கணித விஞ்ஞானத் தேர்வுகளை நடத்தி வருகிறது. இப்போது 2-ம் வருவத்தில் மட்டும் நிலையம் இப்பரீக்ஷைகளை நடத்தி வருகிறது.

க. பொ. த. (உ. த) வகுப்புகளுக்கு விஞ்ஞான, கணித பாடங்களை மட்டுமே நடத்திவந்த நிலையம் கலை, வர்த்தகம் பாடங்களுக்கான தேர்வுகளையும் நடத்தும்படி

மயிலங்கூடலூர்
பி. நடராசன்

நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது யாரும் இப்பரீக்ஷைகளை நடாத்த முன்வராத நிலையில், வர்த்தக மாணவரின் நலனை நோக்கமாகக்கொண்டு நிலையம் அண்மையில் இத் தேர்வுகளையும் பொறுப்பேற்றுள்ளது.

யாழ் மாவட்ட பாடசாலைகள் மட்டுமன்றி தரமான, ஒழுங்கான தேர்வுத் தாளை மாணவரை உட்படுத்த வேண்டுமென எண்ணும் வெளிமாவட்டப் பாடசாலைகளும் இத்தேர்வுக்கு மாணவர்களை அனுப்புகின்றன.

செய்முறைத் தேர்வு

வகுப்புகற்பித்தலில் செய்முறைக்கு முக்கிய இடம் அளிப்பதை உறுதிப்படுத்துவதற்காக 1972இல் "நிலையத்தேர்வு' என்னும் செய்முறைத் தேர்வு கல்வி அமைச்சினால் புகுத்தப்பட்டது. இத்தேர்வு கல்வி அமைச்சைப் பொறுத்தவரையில் ஏட்டளவில் நின்றுவிட்டது. ஆனால் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் மட்டும் இக்கடினமான தேர்வு முறையை ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டு வடமாநிலத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த வழிகாட்டியது. விஞ்ஞானக்

(6-ம் பக்கம் பார்க்க)

கேட்டீர்களா?

நாய்கள் மீது நமது முனிசிப்பாலிட்டிக் காரர்களுக்கு பிறந்துள்ள கருணையே கருணை! வீதிக்குவீதி ஒழுங்கைக்கு ஒழுங்கை பார்க்குமிடமெல்லாம் நாய்கள், நாய்கள்! கிளர் நாய், சொறி நாய், சடி நாய்— இப்படி இந்த நாய் வர்க்கம் பெருகிக் கொண்டே போகிறது! இந்த நாய்களுக்கு பக்கம் எப்போது யார் மீது பாயுமென்பது யாருக்கும் தெரியாது. யார் யார் மீது பாய்ந்துள்ளது என்பதும் தெரியவில்லை. பள்ளிக்கூடச்சிறுவர்கள் இவற்றால் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகி வருவதைக் காணக்கூடியதாயுள்ளது.

நகர மக்களின் சுகாதாரத்திற்கு இது ஒரு சவாலாயுள்ளது இவற்றின் கழிவுகள் என்ன ஆகின்றன?

நாய்களை ஒழிப்பது ஒரு பாவகாரியமென்று முனிசிபாலிட்டிக்காரர்கள் கருதுகிறார்களா?

பொது சன நூலகத்திற்குப் புதிய கட்டிடம். புதிய புத்தகங்கள். நிதிசேர்த்தல் என்று அவர்கள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கும் போது இவற்றை கவனிக்க நேரம் ஏது. எங்கிருந்தோ ஒரு சந்திரைக் காரர். உண்டைதான்.

கதைகோடு கதையாக நூலகத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபா கட்டிடத்திட்டம் இருக்கிறதே. இது மக்கள் மத்தியில் இருந்து. வந்த கலையையும் அனுதாபத்தையும் இல்லாமற் செய்து வெறுப்பை கிளப்பியுள்ளதாக வெளியே பேசிக் கொள்ளப்படுகிறது.

ஃ ஃ ஃ

நாய்பிடிகாரர்கள் இருந்திருந்து தலைகாட்டுவதாகவும், ரோட்டு நாய்களை விட்டுவிட்டு வீதிக்குவரும் வீட்டு நாய்களையே அவர்கள் பிடிப்பதாகவும் பின்னர் பேரம் பேசிப் பெற்றுக் கொண்டு அவற்றை விடுவோரவதாகவும் நண்பர் ஒருவர் சொல்கிறார்.

ஃ ஃ ஃ

நாய்வளர்ப்பவர்களுக்கு அதனை ஒழுங்காக வளர்க்கத் தெரியவேணும் வளர்ப்பு நாய் வீதிக்குப்போக ஏன் அனுமதிக்க வேண்டும்? சரியாக போஷிக்க முடியாதவர்கள் நாய் வளர்க்க கூடாது. வளர்க்க வேண்டியவர்கள் வளர்க்கத்தான் வேண்டும்.

ஃ ஃ ஃ

நாய்கள் மட்டுமென்ன இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாண நகர வீதிகளிலோடுகளும் ஆடுகளும் கூட பவணிவருவதைக் காணலாம்காரியாலயங்களுக்குள்ளேயிருந்து நிர்வாகம் நடத்துபவர்கள் இதனைக்காண்பது கடினம் சில சமயம் பசுக்களும் கன்றுகளும் கூட்டமாக வீதிகளில் உலாவருவதையும் போக்குவரத்துக்கு அவை இடைஞ்சல் விளைவிப்பதையும் நான் கண்டிருக்கிறேன். இவற்றைப் பிடிப்பதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் மாடுகாரரிடமிருந்து மாத வேதனம் பெற்று வருவதாகவும் ஒரு கதை.

ஃ ஃ ஃ

ஆமா, நகரின் வடிகால்களிலிருந்து வழிந்தெழுந்து வீதியோரங்களில் குவிக்கப்படும் மண்மேடுகள் எத்தனை மாதத்திற்கொருக்கால் அகற்றப்படுவது வழக்கம்?

ஃ ஃ ஃ

மழை ஆரம்பித்தால் பாவம் நகரப் பாதசாரிகள்? குண்டு குழிகளிலுள்ள நீரைக்களிலிருந்து உங்கள் உடுப்புகளைக் காப்பாற்ற நீங்களே யுக்திகளைத் தேடிக்கொள்ளுங்கள்.

ஃ ஃ ஃ

"வாலைக் குழைத்து வரும் நாய் தான் அது மனிதனுக்குத் தோழனடி பாப்பா''

— பாரதி

—கொண்டோடி.

கடத்தப்பட்ட விமானப் பயணிகள் இன்று பம்பாய் வருவர்?

புதுடில்லி, நவ. 27

தென்னாபிரிக்க கலிப்பகடைகளால் டர்பனுக்கு கடத்திச் செல்லப்பட்ட 'ஏர் இந்தியா போயிங்' பயணிகள் 79 பேரும் இன்று மாலை பம்பாய் வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இவர்கள் டர்பனிலுள்ள லூயி போட்டோ விமான நிலையத்திலிருந்து நைரோபிக்குச் சென்று அங்கிருந்து பம்பாய்க்கு வருவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுசமந்தியமில்லாதபட்சத்தில் பயணிகள் லண்டனிலிருந்து சென்று, அங்கிருந்து பம்பாய்க்கு வருவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இது சமந்தியமில்லாதபட்சத்தில் பயணிகள் லண்டனிலிருந்து சென்று அங்கிருந்து இன்று சனிக்கிழமை பிற்பகல் பம்பாய் வந்து சேருவார்கள் என கூறப்பட்டது.

சாலிஸ்பரியிலிருந்து பம்பாய்க்கு சென்றுகொண்டிருந்த போதே இவ்விமானம் கடத்தப்பட்டது தெரிந்ததே.

இவ் விமானத்தை கடத்தியவர்களுக் லூயிபோட்டோ விமானநிலைய பாதுகாப்புப் படையினருக்குமிடையேநடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் ஒருவர் பலியானதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த துப்பாக்கிச்சண்டையில் பிணையர் விமானத்தை கடத்திய ஆறு கடத்தல்காரர்களும் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தது தெரிந்ததே. (வெ)

திருப்பத்தூர் இடைத் தேர்தல்

சென்னை, நவ. 27

திருப்பத்தூர் இடைத் தேர்தல் பிரசாரம் இன்று மாலை முடிவடையுமென தெரிவிக்கப்பட்டது. இன்று ஞாயிற்றுக்கிழமை வாக்குப் பதிவு இடம் பெறுமெனவும், திங்கட்கிழமை வாக்குகள் எண்ணப்பட்டு அன்று மாலை முடிவுகள் அறிவிக்கப்படக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

புற்றுநோய்க்கு 'லேசர்' கதிரியக்க சிகிச்சை

டோக்கியோ, நவ 27

'லேசர்' கதிரியக்க சிகிச்சையின் மூலம் புற்றுநோயை குணப்படுத்த முடியும் என்று ஜப்பானிய டாக்டர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

புற்று நோயால் பாதிக்கப்பட்ட இடத்தில் 'லேசர்' கதிர்களைப் பாய்ச்சி 6 பேருக்கு இந்நோய் குணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இக் குழு தெரிவித்துள்ளது. (இ)

"மகாபொல புலமைப் பரிசில்: ஏழைப் பிள்ளைகளுக்கு முதலிடம் வழங்கவேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"சகல துறைகளிலும் தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டது யாழ். மாவட்டமே. இந்நிலையை நாம் தளரவிடக் கூடாது' என்று யாழ் பரமேட்டி ஆயிலுந்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற "மகாபொல" 2-வது கவிப் விற்பனையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

விற்பனைத் திணைக்கள பிரதி ஆணையாளர் திரு எம்.கணேசநாதன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

(5ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தான் அணுகுண்டு சீனாவில் பரீக்ஷிக்கப்படும்?

லண்டன், நவ 27

பாகிஸ்தான் சொந்த அணுகுண்டை உற்பத்திசெய்யும். வருட இறுதியில் இது சீனாவில் பரீக்ஷிக்கப்படும் என்று (நியூ 'ஸைன்டிஸ்ட்' எனும் பிரிட்டிஷ் விஞ்ஞான சஞ்சிகை எழுதியுள்ளது.

சீனப் பிரதமர் ஸாவோ ஷியாங், இஸ்லாமாபாத்துக்கு விஜயம்செய்தபோது, இவ் விஷயத்தை, ஜனாதிபதி ஷியா வுல்ஹக் அவருடன் கலந்தாலோசித்தார் என்றும் 'நியூ ஸைன்டிஸ்ட்' எழுதியுள்ளது.

அமெரிக்க ரஷிய சேனை நிபுணர்களின் அபிப்பிராயத்தையும் அத்தாட்சியாக அணுகுண்டை உற்பத்திசெய்ய பாகிஸ்தான் பகிரங்கப்பிரயத்தனம் எடுப்பதாக இந்த பிரிட்டிஷ் விஞ்ஞான சஞ்சிகை கூறுகிறது.

புதிய அமெரிக்க நிர்வாகம் பதவிஏற்றவுடன் தொடர்ந்து எப்-16 விமானங்களை எடுத்-60 டாங்கிகள் போன்ற தரக்குறைவான ஆயுதங்களை ஐந்தாண்டு திட்டத்தில் கீழ் பாகிஸ்தானுக்கு வாஷிங்டன் வழங்க முன்வந்துள்ளது.

இப் பின்னணியில் லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு பாதுகாப்பு ஆராய்ச்சி நிபுணர் அளித்துள்ள பேட்டியில் பாகிஸ்தான் வசம் அணுகுண்டு வந்தால் அது ஒரு நேச அரசாங்கத்தில் வசமிருக்கும் அணுகுண்டு உள்ளதையே வரட்டும் என்று கூறியுள்ளார். இந்தவகையில் வாஷிங்டன் பீகிங், இஸ்லாமாபாத் ராணுவ அரசியல் கட்டணியொன்று உருவாகுவதை காண்டுவதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் நியூயோர்க் செய்தியொன்று, அணுகுண்டு உற்பத்திக்குத் தேவையான செழுமைப்படுத்தப்பட்ட யுரேனியத்தை சீனா தென்னாபிரிக்காவுக்கு அனுப்புவதாக அமெரிக்க ராணுவசேவைகளின் தகவல்களை வைத்து வாஷிங்டன் போஸ்ட் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

நரசிம்மராவின் நேபாள விஜயம்

புதுடில்லி, நவ. 27

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு பி. வி. நரசிம்மராவ் நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று நேபாளம் சென்றுள்ளார்.

இவர் அங்கு நேபாள மன்னர் பிரேந்திராவைச் சந்தித்து இந்திய - நேபாள உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார். (வெ)

திரைப்பட பொன்விழா

சென்னை, நவ. 27

திரைப்படப் பொன்விழா சென்னையில் நடைபெறுமென தெரிவித்த திரைப்பட சங்கத்தலைவர் திரு. டி. ராமானுஜம் தெரிவித்தார்.

இத்திரைப்பட விழாவில் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளைச் சேர்ந்த 7 க்கும் அதிகமான திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா - பங்களாதேஷ் நிலஎல்லை ஒப்பந்த பேச்சுவார்த்தை

டாக்கா, நவம்பர் 27

இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும்மிடையிலான 1974 ம் ஆண்டு நில எல்லை ஒப்பந்தம் தொடர்பான அதிகாரிகளின் பேச்சுவார்த்தை இன்று டாக்காவில் ஆரம்பமாகிறது.

இந்திய தரப்பிலான பேச்சுவார்த்தைக் குழுவிற்கு அந்நாட்டின் வெளியுறவுச்செயலாளரும், பாகிஸ்தான் தரப்பிலான 10 பேர்கொண்ட குழுவிற்கு அந்நாட்டின் வெளியுறவுச்செயலாளரும் தலைமை தாங்குகிறார்கள்.

இதுதொடர்பாக இவ்விரு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் கடந்த செப்டம்பர் மாதம் புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டது தெரிந்ததே. (வெ)

பிரான்சுக்குள் சட்டவிரோதப் பிரவேசம்

பாரிஸ், நவம்பர் 27

இன இளைஞர்கள் சட்டவிரோதமாக பிரவேசித்ததை தடுத்து அந்நாட்டு அரசாங்கம் பிரான்சுக்கு எல்லைகளில் காவல் கண்டிப் பலப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

உங்கள் பண முதலீட்டுக்கு

உறுதிமிகு பாதுகாவலும்
கவர்ச்சிமிகு தேட்டமும் தரும்
முதிர்ச்சிபெற்ற நம்பகமான
பணவிருத்தி ஸ்தாபனம்

30%

தி சென்றல் :பினான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

(ஒரு வரையறுக்கப்பட்ட பொது ஸ்தாபனம்.
5-ம் திகதி ஜூன் 1951-ம் பதிவு செய்யப்பட்டது)

காலவரை	தொகை	வருடாந்த வட்டி		
		மாதாந்தக் கொடுப்பனவு	வருடாந்தக் கொடுப்பனவு	முடிவுகாலக் கொடுப்பனவு
2 வருடங்கள்	ரூபா 500 முதல் 100,000 வரை	22%	25%	27%
2 வருடங்கள்	100,000 குக் அதற்கு மேலும்	24%	27%	30%

இயக்குனர்: சி. விஜயனுயக்கா (சமாதானநீதி-திவிநாக இயக்குனர்)
ஏ. எஸ். கருணாரத்ன, ஜே. பி., சட்டத்தரணி.
ரி. ஏ. துனுவில, ஓ. பீ. ஈ., சட்டத்தரணி,
எம். சி. சன்சோனி, பீ. ஏ. (இலங்கைப்பாதிய பிரதம நிதியரசர்)
ரீ. எம் துனுவில, பீ. ஏ., கர்னல் ஈ. ஜே. டிவிதோட்டவெல,
கர்னல் ஏ. ரீ. நுகவெல

முக்கிய வர்த்தகத்துறைகள்: பணக்கையாள்கை, காணி அபிவிருத்தி, இறக்குமதி, பிரதிநிதித்துவம், விநியோகம்.

பொருளாதார நிலை பற்றிய தகவல்:-

	1977/78	1978/79	1979/80
முதலீடு	1,522,500	1,522,500	1,522,500
ஒதுக்கிய மூதல்	3,107,970	7,030,225	8,742,785
முதலும் ஒதுக்கிய நிதியும்	4,630,470	8,522,725	10,265,285
வைப்பு மூதல்	27,684,075	29,958,100	33,671,700
கடன் பெறு மூதல்	207,205	2,333,606	5,075,248
மொத்த நிதியம்	36,378,176	46,198,309	55,703,505
லாபம் (வைப்பாளருக்கு வட்டி கட்டமுன்)	6,642,954	8,075,258	9,411,865
வைப்பாளருக்கு கட்டிய வட்டி	3,746,107	4,814,736	5,862,417
சரி லாபம் (வரி கட்டுமுன்)	2,896,847	3,260,516	3,529,448
அரசு லாபம் [வரிகட்டிய பின்]	1,786,805	1,775,842	2,135,945
பங்கு லாபம்	319,725	365,400	411,075
பங்கு லாபம்	21%	24%	27%

தி சென்றல் :பினான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

தலைமை அலுவலகம்:
24 தலதா வீதி,
கண்டி
போன்: 4098, 3818, 3076

நகரி அலுவலகம்:
(நிர்வாகம்-ஃபோர்ப்ஸ் அன் வாக்கர் லிமிட்டெட்)
நம்பர் 221/5, தர்மபாலமாவத்த
கொழும்பு-7, போன்: 93792

கிளை அலுவலகம்:
251, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8360

ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களாகப் பணவிருத்திப் பணி-பிறருக்காக

இளம்பெண்களுடன் சேட்டைவிடும் இளைஞர்களுக்கு கடும் தண்டனை வழங்கவேண்டும்'

யாழ். நீதவான் எச்சரிக்கை

(கண்டிக்குறி)

"பொது இடங்களில் இளம் பெண்களுடன் சேட்டை, பகிடிவிடும் அப்பாவி மக்களிடம் கப்பம் கேட்டும், தொந்தரவு செய்யும் இளைஞர்களுக்கு கடும் தண்டனை வழங்கவேண்டும்"

தொந்தரவு செய்ததாக ஆஜர்செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை எச்சரித்து விடுதலை செய்கையில் யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நகரின் பொது இடங்களில் இளம் பெண்களுடன் சேட்டைபகிடிவிடு தொந்தரவுசெய்ததாகவும் அப்பாவிகளை மிரட்டி கப்பம் கேட்டதாகவும் யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியைச் சேர்ந்த கந்தப்பு சந்திரசேகரன் எனும் இளைஞனை யாழ். பொலிசார் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர்.

மனைகூட்டிச் செல்வதாக இளைஞனின் தரப்பார் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி விருந்தார்.

பொலிசாரின் குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்த யாழ். நீதிபதி திரு ரி. ஜோகநாதன் இளைஞனின் தரப்பாரைப் பார்த்து கூறியதாவது:

உனது மகன் யாழ் நகரின் பஸ் நிலையத்திலும் மற்றும் பொது இடங்களிலும் இளம் பெண்களுடன் சேட்டை பகிடி விடுவதாகவும் அப்பாவிகளிடம் மிரட்டிக் கப்பம் கேட்டு தொந்தரவு செய்வதாக பொலிசார் தெரிவிக்கிறார்கள்.

அப்படிப்பட்ட குற்றங்கள் செய்யும் இளைஞர்களை மாதக் கணக்கில் றிமாண்டுக்கு வைத்து கடும்தண்டனை வழங்கவேண்டும். இனிமேல் உனது மகன் அவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள். அவனுடைய சகாக்களுக்குர், அவர்களின் பெற்றோர்களுக்கும் இதுபற்றித் தெரிவித்து மீண்டும் அவர்கள் பொலிசில் மாட்டிக்கொள்ளாமல் பண்புடன் பெண்களுடனும். அன்புடன் அப்பாவிகளுடனும் பழக நல்ல அறிவுரைகளை வழங்கவேண்டும்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று 'நர்த்தனக் கோலம்' என்ற நடன நிகழ்ச்சியை ஆவிக்கிறார் செல்வி ஆனந்தராணி ராஜரட்ணம். பாரதி நூற்றாண்டைபொட்டு பாரதியின் பெண் விடுதலை பாடல்களுக்கு நடனம் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியோடு திரு. கணேசன் இசையமைப்பில் 'கான சரஸ்' என்ற மெல்லிசை நிகழ்ச்சியும் சே. பாலேந்திராவின் நெறியாள்கையில் 'இடைவெளி' என்ற நாடகமும் இடம்பெறும். இவையாவற்றை இலவசமாக வழங்குகிறார்கள் கலாரேபியா நிறுவனத்தினர்.

REGAL (Jaffna)
Daily 5 Shows
Robert Sads
(New Secret agent)
in
BILLION DOLLAR THREAT
(an action packed Spy Thriller)

ஜூபிலி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வொஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வொஜி
உயர்ந்தமனிதன்

விக்டோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
THE BETSY
(Color-Adults only)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
நாகேஷ், கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
சர்வர்சுந்தரம் (புதிய பிரதி)

சாந்தி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
மேலும்... விரைவில்... (கலர்)
குரு
பரபரப்பூட்டும் 11 வது ஜனத்திரள் வாரம்!

நியூ மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
நான் வாழவைப்பேன்

ரீகல் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்) எம். ஜி. ஆர். - லதா நடித்த
சிரித்து வாழவேண்டும்
(கலர்)

தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
BRUCE LEE'S
ENTER THE DRAGON

விஜயா 2-வது ஜனத்திரள் மாதம் (யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி.ப. 2-30, 6-15, 9-30.
காளி
ரஜனிகாந்த், சீமா (இருவேடம்), விஜயகுமார், படாபட், கருவிராஜன்
(கலர்)
பார்த்தவர்கள் பேசத்துடிக்கிறார்கள்! பல லக்ஷ ரூபா செலவில் உருவான பயங்கர சண்டைகள்—இனிய பாடல்கள்—நிறைந்த நெஞ்சைத் தொடும் காவியம்

8 சைக்கிள்களை பொலிசார் மீட்டனர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத் தீவுமுதல் முதலாளியிடமிருந்து ஆனைக்கோட்டை, குருநகர், கலாவடி, கொக்குவில் ஆகிய இடங்களில் திருடப்பட்டதாகக் கருதப்படும் 8 சைக்கிள்களைப் பொலிசார் கைப்பற்றினர்.

யாழ். பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. கே. சிறிதரன், சார்ஜண்ட் நிக்லாஸ்துரை, ஜேசுதாசன், கான்ஸ்டேபிள் பெரிஞ்சேரா ஆகியோரடங்கிய பொலிஸ்சேஷ்டு ஆனைக்கோட்டையில் உள்ள இடங்களைச் சோதனை நடத்திய போது இச் சைக்கிள்களைக் கைப்பற்றியதுடன் முதலாளி அப்துல்காதர் என்பவரையும் கைதுசெய்தது. (இ)

சாராய விலை உயர்வால் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு?

[யாழ்ப்பாணம்]

சாராயத்தின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

உரும்பராய் கிழக்கில் கசிப்பு வடித்துக் கொண்டிருந்த ஒரு கோஷ்டியினரைப் பிடிக்கச் சென்ற பொலிசார், 80 லிருந்து கசிப்பையும் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் கைப்பற்றினர். கசிப்பு வடித்துக் கொண்டிருந்த நாலு பேரும் தப்பி ஓடிவிட்டனராம்.

கல்லுண்டாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் கனேந்திரனின் உத்தரவின் பேரில் சென்ற சார்ஜண்ட் பொ. பரமானந்தன், மாஸ்டர் டபிள்யூ ரி. குணசிங்கம், ஏ. கி ரத்தினராசா, எஸ். அரசரத்தினம், எஸ். சிவராசா ஆகியோர் நேற்றுக் காலை நடாத்தியதாகக் கூறப்படுகிறது.

உரும்பிராய் கேற்றிலுள்ள ஒரு வீட்டில் சோதனைசெய்த கேற்படி பொலிசார் 10 போத்தல் கசிப்பு கண்டெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (மா)

எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தண்ணீரிக்கிழ் வடமேல் வெடிவைத்துமீன் பிடித்ததாகச் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பத்திரிகை ஆராய்ந்திருப்பதாக சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆக்சேபனை தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் எதிரிகளை விடுதலை செய்தார்.

குருநகர் கடலில் வடமேல் வைத்து மீன் பிடித்ததாக ஆரைத்துரை, புஷ்பம், வி. சோதராசா, ஏ. ரகு, எம். கரிதாஸ் ஆகிய ஐவரையும் யாழ். காவல்துறை மீன்பிடி இலாகா தலைமைக்காரியாலய பரிசோதகர் எஸ். சிவராசபிள்ளை வைதசெய்து, யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

மீன்பிடிப் பரிசோதனை செய்த சம்பவங்கள் அதிகாரி, தண்ணீரிக்கிழ் வெடி வைத்து பிடிக்கப்பட்ட மீன்கள் என அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

குற்றப்பத்திரிகை ஆக்கிரமித்திருப்பதால் குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்த நீதவான் எதிரிகளை விடுதலைசெய்தார். (மா)

தேங்காயில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குவிக்கிறது. தேங்காயின் தொடக்கி தாவியின் முடிவிறதாக இருக்கக்கூடாது.

குறித்தகாலத்தக்குள் தீர்க்கோர்ட்டுப்பக்கம்வந்தால் நீர் வரி கலுக்குப்போகவேண்டி வரும் இப்போழுது ஒத்தி வைக்கப்பட்ட 3 மாதத்துடுழி பக்கி வெற உலக்கு விடுக்கி றேன் என எச்சரிக்கை செய்தார். (ம)

வெஸ்லி காலிவீதி
தினசரி 2-30, 6-15, 9-30
ரஜனிகாந்த்-பாலாஜி
தீ

மகாபொல...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"மரணவீட்டில் மனமுடைந்து வாழ்க்கையைச் சீரழிக்கும்தீய ஏற்பாடாகக் இருக்க அவர்களை நல்லமுறையில் பாதுகாக்க வேண்டும்.

"அரசாங்கம் சுவிப் ரிக்கெட்டுகள் மூலம் பணம் சேகரித்து, புலமைப்பரிசில்களை வழங்குகிறது. இதற்கு மக்கள் ஆதரவு கொடுக்கவேண்டும்

"இச்சீட்டிழுப்பு ஒரு சூதாட்டமல்ல. இதன்மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில்களில் ஏழைப்பிள்ளைகளுக்கு முதலிடம் வழங்கவேண்டும்.

வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. கே. சிவநாதன், உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. கி செபரத்னம், விநாயகர் ஆலயபரிபாலன சபையினர் திரு. சே. வரமதேவா ஆகியோருக்கு வரவேற்றினர் மா!!

ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்

(சுன்னாகம்)

கழுத்தில் பூமாலை அணிந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தைச் சுற்றிப் பவனியாகும் 'மாலைராணி' என்று அழைக்கப்படும் இளம் பெண் யாழ். நீதவான் அதிகாரியால் ஆதரவிட்டார்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும் நகரின் முக்கிய வீதிகளிலும் வழிப்போக்கர்களை ஏசியும். தூசித்தும் நடந்ததாகவிலும் ஈடுபடுவதாகக் குறைப்படும் கேற்படி இளம் பெண் யாழ். பொலிசார் கைதுசெய்து யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

கேள்விகளுக்கு மௌனம் சாதித்த இப்பெண் சித்தசுவாதீனமுற்று இருக்கலாம் என்று கருதிய நீதிபதி அவரை வைத்தியப் பரிசோதனை செய்யும் பொருட்டு டிசம்பர் மாதம் 7ம் திகதிவரை அதிகாரியால் மனநோய் வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

மைதானத்திற்கு ரூ. 50 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சார்வதி வாலிபர் பாலபத்தில் விளையாட்டு மைதானத்திற்கு நிலம் வாங்கவும் மின்சாரம், நீர் விநியோகம் அமைவதற்கு 75 ஆயிரம் ரூபாவை வட்டுக்கோட்டை எம் பி. திரு. ரி. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்துள்ளார்

விளையாட்டு மைதானத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் நீர், மின்சார விநியோகத்திற்கு 25 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது!

தந்தை கண்டித்தார் சிறுவன் தற்கொலை!

[மண்டைதீவு]

அண்ணனுக்கும் தம்பிக்கு மிடையே ஏற்பட்ட வாக்கு வாதத்தைக் கண்டித்த தந்தையார் தம்பியை மட்டும் கண்டித்தாராம். தந்தையின் கண்டிப்பை தாங்காத 13 வயதுச் சிறுவன் கிருமிநாசினி அருந்தி மரணமானார். இச்சம்பவம் மண்டைதீவு முதலாம் வட்டாரத்தில் காலஞ்சென்ற சிறுவன் செ. குணபாலனின் தந்தை மரணம் தொடர்பாக அங்கப்பிடி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. வல்லிபுரநாதன் விசாரணை நடத்தினார் சிறுவனின் தந்தை திரு செல்வராசா சாக்கிய மளிகையில் கூறியதாவது;

காலஞ்சென்றவர் எனது இளையமகன். இவர் சகோதரனின் புதிய சைக்கிளைப் பழுதுபார்ப்பதற்கு எடுத்துச் செல்வார். சம்பவம் நடந்த அன்றும் சகோதரனின் சைக்கிளை எடுத்துச்சென்றார். இதனால் அண்ணனுக்கும் தம்பிக்கும் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. இதை அவதானித்த நான் "வயதில் இளையவனான நீ அண்ணனுடன் மரியாதையாக நடந்துகொள்ளவேண்டும்" என்று காலஞ்சென்றவரைக் கண்டித்தேன். எனது கண்டிப்பைச் சகிக்காத இவர் ஓடிச்சென்று நச்சுத்திராவகத்தை குடித்து விட்டார்".

திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பளித்து: சிறுவர்களையும் இளைஞர்களையும் அன்பானவழியில் கண்டிக்க கண்டிப்பு இல்லை இவர்கள் விபரீத முடிவுக்கு செல்லுவிடுவார்கள் என்று கூறினார்.

"பிறந்ததின நாட்களில் ஒருமரத்தைநாட்டுங்கள்"

(மண்டைதீவு)

"பெற்றோர் தங்கள் குழந்தைகளின் பிறந்த தினத்தன்று ஒரு மரத்தை நட்டு விழா கொண்டாடுவதே அவர்களின் எதிர்காலத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடாகும்"

இவ்வாறு மண்கும்பான் மேற்கு சர்வோதய இயக்கத்தின் கீழ் இயங்கும் பாலர்பாடசாலையில் சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஆரியரட்ணஞ்சிங் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற மரம் நாட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தோனிப்பிட்டிகிராமசபை நூலகர் செல்வி ஜெபலட்சுமி ஏரக்கு குறிப்பிட்டார்- அவர் மேலும் பேசுகையில்:

"இன்றுபிறந்த தினக் கொண்டாடுகின்றார்! பத்திரிகை, வானொலி என்பவற்றில் விளம்பரம் செய்வது! நல்ல உணவுவகைகளை சமைத்து உண்பதுதான் வழக்கமாகிவருகின்றது. இந்நிகழ்ச்சிகள் இன்றோடு மறந்துவிடுகின்றது. ஆனால் பிள்ளைகளின் பெயரில் ஒருமரம் நாட்டினால் அதனால் பயன் எதிர்காலத்தில் கிடைக்கும். இன்று சர்வோதயத் தலைவர் திரு. ஆரியரட்ணஞ்சிங்கின் பிறந்தநாளை முன்னிட்டு சர்வோதய பாலர்பாடசாலையில் மரம் நாட்டுவது போல உங்கள் பிள்ளைகளின் பிறந்த நாளிலாவது பயன் தரும் மரங்களை நாட்டி சிறப்பாகக்கொண்டாடுவதே மேலானது" என்றார்.

விழா இறுதியில் மேற்படி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சைக்கிளில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கஸ்தூரியார் வீதியிலுள்ள மதுபான விற்பனை கடையொன்றில் கேள்பார்த்து ஊழியர் ஒருவர் அங்கடைக்கு உரிய இப்பணத்தை கிறான்லி வீதியிலுள்ள வங்கியில் போடுவதற்காகக் கொண்டு போனாராம். திடீரென சைக்கிளில் வந்த ஒருவர் இவரிடமிருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடி விட்டதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பணத்தைப் பறித்துச் சென்றவரை அடையாளம் காட்ட முடியும் என ஊழியர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலீசார் விசாரணை செய்து வருகின்றனர். [பண்.நி]

இந்தியாவுக்கு இலங்கை வாக்குறுதி

புதுடில்லி, நவ. 27

இலங்கையில் வெளிநாட்டுத் தளம் எதுவும் அமைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என இந்திய அரசுக்கு இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.

இந்திய ராஜ்யசபையில் இத்தகவல் என்று வெளியிடப்பட்டது.

வெளிக்கள...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அதிகாரியாகவிருந்த திரு. மு. அற்புதநாதன் இதனைத் தொடக்கி வைத்தார். விஞ்ஞானக்கல்வி அதிகாரி திரு. க.பொன்னம்பலம் அவர் பணிமனைத் தொடர்ந்தார். இன்று அவருடன் விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. கி. கமலநாதன் இணைந்து செயற்படுகிறார். ஒவ்வொரு வருடமும் இரண்டாம் பருவத்தில் பல்தேர்வு அறைப்புக்கட்டுரை செய்முறை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய விஞ்ஞானத் தேர்வை 6—10ஆம் தரங்களுக்கு நிலையம் நடத்தி வருகிறது.

கல்வி அமைச்சு நடத்திய கல்வித்துறை புதுப் புனைவுகள் பற்றிய கருத்தரங்கில் செய்முறைத் தேர்வும் ஒரு புதுப்புனைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர் கழகம்

பாடசாலைகளிலுள்ள விஞ்ஞான மன்றங்கள் விரும்பினால் நிலையத்துடன் இணைந்து செயற்பட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழப் பதினைந்து கல்லூரிகளின் விஞ்ஞான மன்றங்களைக் கொண்ட இளைஞர் கழகம் வெளிக்கள நிலையத்துடன் இணைப்புப்பெற்றுள்ளது இக்கழகத் தொழிற்பாடுகளின் விவரங்களை ஆய்வுப்பணிக்கொடைத் திட்டக் நடைமுறைக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்வாகமும் நிதியும்

ஆர்வமுள்ள அனைவரும் உறுப்பினராகலாம் என்பது நிலையமாகி எனினும் மிகச் சிலரே உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் வழங்கும் சிறு பிரிவினைப்பணம், பொருட்காட்சி முதலியவற்றின் மூலம் திரட்டும் நிதி என்பவற்றைக் கொண்டே நிலையத்தின் வளர்ச்சி நிழ்கிறது.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரைக் காப்பாளராகக் கொண்ட செயற்குழு நிலையத்தின் பணிகளை மேற்கொண்டுவருகிறது இரண்டு ஆசிரியர்கள் முழுநேரக் கல்வி நெறியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நிலைய நிர்வாகம் பாசறைப் பணிகள் என்பவற்றோடு நேர அட்டவணைப்படி நிலையத்துக்குவரும் மாணவர் குழுக்கள் பாடத்திட்டத்துடன் தொடர்புடைய ஆய்வுப்பணிகளில் ஈடுபடவும் வழிகாட்டுகின்றனர்.

நிலையத்தினால் நடத்தப்படும் குறிப்பிட்டசில பாசறைக் குழுக்கு நிதி புலையிரத ஆணைக்குழு என்பவற்றைக் கல்வி அமைச்சு வழங்கி வருகிறது. மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது" என்ற வகையில் யாழ். மாவட்டத்திற்குக் குறிப்பாகவும் அனைத்திலங்கைக்குப் பொதுவாகவும் பணியாற்றி வரும் இந்நிலையத்தின் வளர்ச்சியில் பொதுமக்கள் அனைவரும் ஆர்வம் கொள்வது சமூதாய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்:

இந்தியா-197 ஓட்டங்கள் இங்கிலாந்து 1-15

பம்பாய், நவ. 27

பம்பாயில் இன்று ஆரம்பமான இந்தியா—இங்கிலாந்து முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 179 ஓட்டங்கள் எடுத்தது.

இதனைத் தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்துக் கோஷ்டி ஆட்ட நேரம் இறுதிவரை ஒரு விக்கெட்டை இழந்து பதினைந்து ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியத் தரப்பில் காவஸ்கர் 55 ஓட்டங்களையும் கபில்தேவ் 38 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

சந்தேகநபர்

அடையாளம் காணப்பட்டார்

(புலோலி நிருபர்)

துன்னாலை மீன் விற்பனை பெண் கொலைச் சந்தேகநபர், அடையாள அணிவகுப்பின் போது சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டார்.

கடற்கரையில் மீன்வாங்கி விற்பனை செய்தலும் துன்னாலையைச் சேர்ந்த செல்லக்கிளி, சரஸ்வதி ஆகிய இரு பெண்களும் வழமைபோல கடற்கரைக்கு மீன்வாங்க அதிகாலை சென்றபோது வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையிலுள்ள மணற்காட்டில் செல்லக்கிளி குத்துக்காயங்களுடன் கொலை செய்யப்பட்டிருந்ததும் சரஸ்வதி குத்துக்காயங்களுடன் குற்றுயிரில் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டதும் தெரிந்ததே

இச்சம்பவம் தொடர்பாகப் மூலன் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி வேணுகோபால் என்ற இளைஞரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததைத் தொடர்ந்து சந்தேகநபர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார். இச்சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டார்.

கொலையுண்ட செல்லக்கிளியுடன் மீன்வாங்கச் சென்று குத்துக்காயங்களுடன் குற்றுயிரில் மீட்கப்பட்ட சரஸ்வதி அடையாள அணிவகுப்பின்போது சந்தேகநபரை அடையாளம் காட்டினார். இதனைத்தொடர்ந்து சந்தேகநபர் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதவான் சந்தேகநபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

உணவுப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக உணவுத் தினத்தை யொட்டி யாழ் மாவட்டரீதியில் நடைபெற்ற கட்டுரை, பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இக்கருத்தரங்கில் யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள், திட்டமிடல் அதிகாரிகள், அபிவிருத்தி அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(மா)

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

[1] ஹோம் பினான்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

[2] யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

[3] குயிக் டிரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல: 273 சாவகச்சேரி

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல: 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ சதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல 23277

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

கட்டணம் ரூபா 65-00

மரண அறிவித்தல்

சுந்தரமூர்த்தி பரமேஸ்வரி

சுந்தரமூர்த்தி பரமேஸ்வரி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற T நாகலிங்கம் (T.N. லிமிடெட் அன் சன்) அவர்களின் மகளும், ரகுநாதன், பவானந்தம் நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பாஸ்கரமூர்த்தி கனடா, சச்சிதானந்தமூர்த்தி (சந்திரா), நடராஜமூர்த்தி (ராசன்) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். பூதவுடல் இன்று 28-11-81 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் வீதி, 181ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

1580

RADIO OFFICERS (P. M. G.) Apr 1982 EXAM

புதிய வகுப்புகள் 4-12-81 ஆரம்பமாகும்

நவீன Rhythm முறையில் Morse Code பயிற்சி.

இலவச கையேட்டிற்கு எழுதவும்.

NATIONAL ENGINEERS

57, 59, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் வீதி, 68-ம் இலக்கத்தில்உள்ள "சுதந்திரன்" லிமிடெட்டுக்காக [illegible] 803-ம் இலக்கத்திலுள்ள [illegible] 1981 [illegible] 29-ம் திகதி [illegible] Registered [illegible] News Paper, The General P. O. Sri Lanka Regd.O. P. 10026/81, P. O. Box 15, Jaffna. தொலைபேசி 7707, 881, 6126.